**2019ம் வருடம் மார்ச் மாதம் 08ம் நாள் வெள்ளிக்கிழமையன்று காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடந்தேரிய சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

முன்னிலை – திரு. வே. பாலமுருகன், பி.இ.,
நகராட்சி பொறியாளர், ஆணையர் மற்றும்
தனி அலுவலர் ( பொ),
குன்னூர் நகராட்சி.

–0–0–0–

**581. (இ4/1987/2018)**

குன்னூர் நகராட்சிக்கு **நுழைவு வரி –2017–2018** கீழ் மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் செயல் முறை Proc.D3.No.19628/2018 dt 19.02.2019 –ல் **1** பணிக்கு ரூ.**3,20,000/–**க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. **06.03.2019**ல் அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட சகாயமாத முதியோர் இல்லத்தில் கான்கிரீட் நடைபாதை அமைத்தல் பணிக்கு முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **1.** திரு. ஜி. ஆர். இரவி | மதிப்பீட்டை விட **14.02** % குறைவு |
| **2.** திரு. கே. ஜெயராமன் | மதிப்பீட்டை விட **12.18**% குறைவு |

<u>**அலுவலக குறிப்பு-**</u>

மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட **14.02** % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திரு. ஜி. ஆர். இரவி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் இப்பணிக்கு மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட **14.02** % குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் இத்தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அல்லது வங்கி உத்திரவாதம் (Bank Guarantee) செலுத்திய பின் பணி உத்திரவு வழங்கலாம்.

582. (இ4/2019)

குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான ஒட்டுப்பட்டரை, வசம்பள்ளம் சாலைப் பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கில் துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சகடு கழிவு மேலாண்மை (FSTP) (Fascal Sludge Treatment Plant) அமைக்க வேண்டியுள்ளது. மண்டல நிர்வாக பொறியாளர், திருப்பூர் மற்றும் மண் பரிசோதனை செய்ய அப்பகுதியில் உள்ள குப்பை கழிவுகளை அகற்றிய பின்பு பணி மேற்கொள்ள இயலும் என்று அறிவுத்தலின் பேரில் இவ்விடத்தை இயந்திரம் மூலம் சுத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், குப்பை கிடங்கு பகுதியில் தினந்தோறும் வரும் குப்பைகளை கொட்ட வசதியாக அப்பகுதியில் உள்ள குப்பையை அருகில் உள்ள இடத்தில் மாற்றி கொட்ட வேண்டியுள்ளது. எனவே, FSTP பணிக்காக மண் பரிசோதனை செய்வதற்காக அப்பகுதியில் குப்பையை அகற்ற மற்றும் ஏற்கனவே குப்பைக் கிடங்கில் உள்ள குப்பைகளை அருகில் மாற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.**4.50** இலட்சம் ஆகும். மேலும், இப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் உடனடியாக பணியை மேற்கொள்ள இருப்பதால் தமிழ்நாடு நகராட்சி சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு-</u> மன்றம் பதிவு செய்யலாம்.

583. (எச்2/2019)

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தேவையான சுண்ணாம்புத் தூள் மற்றும் பிளிச்சிங் பவுடர் போதிய இருப்பு இல்லாத காரணத்தினால் சுண்ணாம்புத் தூள் மற்றும் பிளிச்சிங் பவுடர் 1 டன் ஆகியவற்றை கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கவும், அதற்காக உத்தேச செலவீனம் ரூ.70,000/–க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- 1) அனுமதி அளிக்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும், விநியோக உத்திரவு
வழங்கவும் அனுமதிக்கலாம்.

584. (ந.க.எண்.2087/18/எச்2)

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.5.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தனி அலுவலர் அவர்களின் கூட்ட தீர்மாகனம் எண்.427, நாள் 20/08/2018ன் படி வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் கீழ்க்கண்ட பணிகள் ரூ.5,64,334/- மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் செலவினம் ரூ.14,334/-ஐ பொது நிதியிலிருந்து வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | தொகை (ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | நகரின் முக்கிய இடங்களில் LED விளம்பர பலகைகள் அமைத்தல் | ரூ.4,31,309/- |
| 2. | விளம்பர பலகைகளுக்கான சிம்கார்டு வைப்புத் தொகை | ரூ. 2,025/- |
| 3. | டெங்கு காய்ச்சல், H1N1 மற்றும் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு பலகைகள் அமைத்தல். | ரூ.37,500/- |
| 4. | H1N1 தடுப்பு விழிப்புணர்வு பல வண்ணக் கைப்பிரதிகள் அச்சிடுதல். | ரூ.45,000/- |
| 5. | திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு கைப் பிரதிகள் அச்சிடுதல். | ரூ.25,000/- |
| 6. | H1N1 விழிப்புணர்வு சுவரொட்டிகள் அச்சிடுதல் | ரூ.12,500/- |
| 7. | வீடுகளிலேயே திடக் கழிவுகளை உரமாக்கும் பணியினை வீடியோ பதிவு செய்தல். | ரூ.11,000/- |
| | **மொத்தம்** | **ரூ.5,64,334/-** |

அலுவலகக் குறிப்பு- 1) அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றுப் பணி உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

585. (ந.க.எண்.0685/2019/எப்1)

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.டி10எண்.20458/2017, நாள் 19/02/2019ம் தேதிய கடிதத்தில் நீலகிரி மாவட்டம் புதிய கட்டிடங்கள் கட்ட விண்ணப்பங்கள் பதிவிறக்கம் மற்றும் பதிவேற்றம் செய்ய புதியதாக இணைய தளம் அறிமுகப்படுத்தியதற்கு அதற்குண்டான செலவினத் தொகையாக குன்னூர் நகராட்சி சார்பில் ரூ.1185/- பொது நிதியிலிருந்து பிரிண்டோ கிராபி வங்கி கணக்கு எண்.50200018005492, HDFC Bank, உதகை என்ற முகவரிக்கு காசோலை மூலம் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் மேற்படி தொகை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>- அனுமதி வழங்கலாம்.

586. (ந.க.எண்.0334/2019/எப்1)

குன்னூர் நகராட்சி பேரூந்து நிலையம் அருகில் சர்வே வார்டு-பி, பிளாக்– 59, நகரளவு எண்.4ல் உள்ள டீ கடையை அகற்ற தடைக் கோரி திருமதி. துளசிபாய் என்பவர் குன்னூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.9/2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் குன்னூர் வட்டாட்சியர் அவர்களை 1ம் பிரதி வாதியாகவும், குன்னூர் நகராட்சி ஆணையாளர் அவர்களை 2ம் பிரதிவாதியாகவும், மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களை 3ம் பிரதி வாதியாகவும் சேர்த்துள்ளார். எனவே, மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் வழக்கறிஞர் திரு. கே. ராஜ்குமார் அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்தவும், வழக்கிற்கு ஆகும் செலவுத் தொகைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>- அனுமதி வழங்கலாம்.

587. (8192/2011/அ4)

இந்நகராட்சிக்கு சொந்தமான வெளிப்புற சந்தை கடை எண். திருமதி. தாஹிரா என்பவருக்கு கடை உரிமம் எண்.1256 எண் கொண்ட கடைக்கு குத்தகை காலம் 28/02/2019 உடன் முடிவுற்றது. ஆரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03/07/2007ன் படி மேலும் மூன்றாண்டிற்கு கடை உரிமத்தினை புதுப்பித்துத் தருமாறு குத்தகைதாரர் தனது 04/03/2019ந் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார். மேற்படி பொருள் தொடர்பாக வருவாய் அலுவலர் அவர்களின் 04/03/2019ந் தேதிய குறிப்பில் 01/03/2019 முதல் உரிமத்தினை புதுப்பித்து வழங்கலாம் என தனது குறிப்பில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் கீழ்க்கண்டுள்ளவாறு கடை உரிமத்தினை மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து ஆணை பிறப்பிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். (1) | குத்தகைதாரர் பெயர் மற்றும் உரிமம் எண். (2) | குத்தகை காலம் முடிவுறும் நாள் (3) | 28/02/2019 அன்று நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை (4) | 01/03/2019 முதல் ஏற்கனவே இருந்த மாத வாடகையில் 15% உயர்வு செய்த தொகை ரூபாய். (5) | 01/03/2019 முதல் மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூபாய். (6) |
|---|---|---|---|---|---|
| 1. | திருமதி. தாஹிரா உரிமம் எண்.1256 | 28/12/2019 | ரூ.1450/- | ரூ.218/- | ரூ.1668/- |

அலுவலகக் குறிப்பு- கடை உரிமத்தினை 01/03/2019 முதல் மூன்றாண்டு காலத்திற்கு கலம் 6இல் கண்டுள்ள வாடகையை நிர்ணயம் செய்து உரிய ஆணை வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வழங்கலாம்.

588. (இ3/56476/2005)

இந்நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்பு மதிப்பீடு 2019/2020ம் ஆண்டிற்கு மதிப்பீடு தயார் செய்வதற்கு 2018/2019ம் ஆண்டின் மதிப்பீட்டுத் தொகை மற்றும் சாலை சீரமைப்பு கட்டணம் தொகையை 5% உயர்த்தி 2019/2020ம் ஆண்டிற்கு மதிப்பீடு தயார் செய்வதற்கு கீழ்க்கண்ட தொகையை நிர்ணயிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| சாலையின் தன்மை | தொலைவு மீட்டர் | ஆண்டு 2018-2019 ரூபாய். | ஆண்டு 2019-2020 ரூபாய். |
|---|---|---|---|
| சிமெண்ட் சாலை | 0 – 30 m. | 4530/- | 4760/- |
| | 31 – 90 m. | 5410/- | 5690/- |
| மண் சாலை | 0 – 30 m. | 2250/- | 2370/- |
| | 31 – 90 m. | 3130/- | 3290/- |
| தார் சாலை | 0 – 30 m. | 4020/- | 4230/- |
| | 31 – 90 m. | 4900/- | 5150/- |
| மதிப்பீட்டுத் தொகை | | 2650/- | 2790/- |

மேற்கண்ட தொகையை 2019/2020ம் ஆண்டிற்கான மதிப்பீட்டுத் தொகையாக வசூலிக்க தனி அலுவலரின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதி வழங்கலாம்.

**589. (இ2/1143/2019)**

இந்நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் தோஷிபா–இ-ஸ்டியோ ஜெராக்ஸ் நகல் எடுக்கும் இயந்திரத்தில் டோனர் தீர்ந்து விட்டதால் அதிக அளவில் பிரிண்டர் எடுக்க வேண்டியுள்ளதாலும், பல்வேறு கோப்புகள் சம்பந்தப்பட்ட அலுவலக விவரங்கள் நகல் எடுக்க வேண்டி உள்ளதாலும், இரண்டு டோனர்கள் power play imaging solutions கோவை நிறுவனத்திடம் வாங்கி பயன்படுத்த அதற்கான செலவீனம் ரூ.5900/-க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- இதற்காக செலவீனத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

590. **(இ2/1143/2019)**

இந்நகராட்சிக்கு சொந்தமான தோஷிபா–இ-ஸ்டியோ 195 மாடல் போட்டோ நகல் எடுக்கும் இயந்திரம் ஒராண்டு கால பராமரிப்பு முடிவடைந்து மேலும் 2019/2020க்கான ஒராண்டு பராமரிப்பு செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட பணியினை power play imaging solutions கோவை நிறுவனத்திடம் கொடுத்து பராமரிப்பு பணி மேற்கொள்ள அதற்கான செலவீனம் ரூ.9,440/-யினை தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- இதற்காக செலவீனத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**591. (இ4/2019)**

2019ல் பாராளுமன்ற தேர்தல் நடைப்பெற உள்ளதால் தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வாக்குச் சாவடிகளில் அடிப்படை வசதிகளை செய்துத் தர அறிவுறுத்தப்பட்டது. (குடிநீர், மின்சாரம் மற்றும் கழிப்பிட வசதிகள்) அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் துவக்கப்பள்ளி (பாகம் எண்.154) வாக்குச் சாவடியில் பழுது ஏற்பட்டு வாக்கு அளிக்க ஏதுவாக இல்லை. எனவே, இந்த வாக்குச் சாவடி மையத்தை பழுதுப் பார்க்க குன்னூர் நகர உதவி ஆட்சியர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற தொலைப்பேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டதன் பேரில் இந்த மையத்தை பழுதுப் பார்க்க செலவீனம் ரூ.2,36,098/-ஐ செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளவும், நகராட்சி சட்டம் 1920, பிரிவு15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை பதிவிற்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- பார்வைக்கும் , பதிவிற்கும்.

592. (இ2/979/2019)

இந்நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் வாட்டர் பில்டரை ஓராண்டு காலத்திற்கு வாட்டர் பில்டரை பராமரிப்பு செய்ய அவசியமாகிறது. மேற்குறிப்பிட்ட வாட்டர் பில்டரை பாமரிப்பு செய்ய அவசியமாகிறது. மேற்குறிப்பிட்ட வாட்டர் பில்டரை பராமரிக்க ISO-9001-2008 அங்கீகாரம் பெற்ற நிறுவனமான கிரைாஸ் பில்டர் வாட்டர் பியூரிபயர்ஸ் பிரைவேட் லிமிடெட், கோவை நிறுவனத்திடம் கொடுத்து பராமரிப்பு செய்ய அதற்கான செலவீனம் ரூ.4956/-க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- இதற்காகும் செலவீனத்தை நகராட்சி பொது நிதியிலிருந்றது மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

593. (சி2/2171/2018)

2019ஆம் ஆண்டு நடைபெறும் நகர மன்ற தேர்தலுக்கு தேவையான வாக்காளர் பட்டியல், வார்டு வரைப்படம், மண்டல வரைப்படம், வாக்குச் சாவடி பட்டியல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவீனம் மேற்கொள்ள ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மிகாமல் பொது நிதியிலிருந்து செலவினத்தினை மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- தனி அலுவலர் அனுமதி அளிக்கலாம்.

594. (இ2/1144/2019)

இந்நகராட்சி அம்மா உணவகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் வாட்டர் பில்டரை பராமரிப்பு செய்ய அவசியமாகிறது. மேற்குறிப்பிட்ட வாட்டர் பில்டரை பராமரிக்க ISO – 9001 – 2008 அங்கீகாரம் பெற்ற நிறுவனமான கிராஸ் பில்டர் வாட்டர் பியூரிபையர்ஸ் பிரைவேட் லிமிடெட், கோவை நிறுவனத்திடம் கொடுத்து பராமரிப்பு செய்ய அதற்கான செலவீனம் ரூ.5,192/-க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- இதற்காகும் செலவீனத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ஆணையாளர் (பொ) மற்றும்
தனி அலுவலர்,
குன்னூர் நகராட்சி.